முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! ஓணம் திருவிழா!

# கேரள மாநிலத்தில் 1000 பேருக்கு பரிசு - இடுக்கி மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு!

## பூச்சி எஸ்.முருகன் திறந்து வைக்கிறார்! மாநில அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!



கேரளா, ஆக. 25 -

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, கேரள மாநிலத்தில் 1000 பேருக்கு ஓணப் பரிசு, இடுக்கி மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு விழா மற்றும் கழக கொடியேற்று விழாவில், தமிழக வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் கலந்து கொண்டு அலுவலகம் திறந்து கழகக் கொடி ஏற்றி ஓணப்பரிசு வழங்குகிறார் என்று கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கேரள மாநிலம் முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கடந்த ஜூன் மாதம் 3 ம் தேதி முதல் அனைத்து மாவட்டங்களிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது முதல் நிகழ்ச்சியாக கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தலைமையில் 500க்கும் மேற்பட்ட பெண்களுக்கு இலவச சேலைகளை அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது நடைபெற்ற தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா ஊர்வலத்தில் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்டச்செயலாளர் பொ.சிவபத்மநாதன், கொல்லம் மாவட்ட செயலாளர் ரெஜிராஜ் உள்ளிட்ட 500 பேர் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து கேரள மாநில தி.மு.க. விவசாய அணி சார்பாக கொல்லம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 100 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு கேரள மாநில திமுக அமைப்பாளர் முருகேசன் கலந்து கொண்டு விதைகள் இலவசமாக வழங்கினார். இப்போது கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் குமுளியில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா ஆக.27 ஞாயிறு காலை 10 மணிக்கு குமுளி ஒய்.எம்.சி.ஏ. ஆடிட்டோரியத்தில் கொண்டாடப்படுகிறது. கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தலைமையில் நடைபெறும் இந்நிலையில் தமிழக வீட்டு வசதி வாரிய தலைவர், கழக தலைமைக் கழக செயலாளர் பூச்சி எஸ்.முருகன் கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி வைத்து இடுக்கி மாவட்டக் கழக அலுவலகத்தை திறந்து வைத்து ஒய்.எம்.சி.ஏ. ஹாலில் நடைபெறும் நிகழ்ச்சியில் 1000 பேருக்கு ஓணப்பரிசு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் கேரள மாநில பொறுப்புக் குழு உறுப்பினர்கள் மோகன் தாஸ், ஜெயபால், ஸ்டீபன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர் இடுக்கி மாவட்ட வடக்கு செயலாளர் ஜனார்த்தனன் வரவேற்புரை ஆற்றுகிறார் இடுக்கி தெற்கு மாவட்டச் செயலாளர் கனி நன்றி உரை ஆற்றுகிறார். இந்நிகழ்ச்சியின் முன்பாக நடைபெறும் ஊர்வலத்தை கேரள மாநில தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ் தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்சியில் கேரள மாநில தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மது, விபின் முருகேசன் , பிரவீன் ராஜ், முன்னாள் மேல்புறம் ஒன்றிய செயலாளர் சிற்றார் ரவிச்சந்திரன், ஜோஸ், தங்கச்சன், அம்முக்குட்டி மற்றும் கழக முன்னணியின் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர் . இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இடுக்கி வடக்கு மாவட்டச் செயலாளர் ஜனார்த்தனன் மாநில தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் மது ஆகியோர் செய்து வருகின்றனர்.

நம்மை வழி நடத்திய நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து இருந்து இப்போதும் வழிநடத்திக் கொண்டு இருக்கும் தங்கத் தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கழக கொடியேற்று விழா மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு விழா 1000 பேருக்கு ஓணப்பரிசு வழங்கும் விழா ஆகிய இந்த முப்பெரும் விழா ஊர்வலத்திலும் அதைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் அனைத்து நிகழ்ச்சியிலும் இடுக்கி மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டம் முழுவதும் உள்ள கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு கேரள மாநில தி.மு.க. சார்பாக நடைபெறும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை வெற்றி பெற செய்ய வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேரள மாநில தி.மு.க. சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறி உள்ளார்.



கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மதுரை, வடக்கு மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பாக நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும் ஆளுநரையும் கண்டித்து பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற மாபெரும் உண்ணாவிரத போராட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் அமைச்சர் பி மூர்த்தி, கோ. தளபதி எம்.எல்.ஏ., சேடப்பட்டி மு. மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டதில் முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், துவக்கி வைய்த்தார் உடன் மதுரை வடக்கு மதுரை மாநகர் மதுரை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவ அணி அழைப்பாளர்கள், துணை அழைப்பாளர்கள், பொது மக்கள், மாணவர்கள் உள்ளனர்.

கக்கன் திரைப்படத்திற்கு வரிவிலக்கு:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## தமிழ்நாடு காங்கிரஸ் தெரிவித்தது

சென்னை, ஆக. 25-

கக்கன்திரைப்படத்துக்கு வரிவிலக்கு அளித்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சுதந்திரப் போராட்ட தியாகியும், தமிழ்நாடு முன்னாள் அமைச்சருமான பி.கக்கன் வாழ்க்கை வரலாற்றை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்கிற வகையில் சங்கர் மூவீஸ் சார்பாக மேட்டுப்பாளையம் ஜோசப்பேபி தயாரித்து நடித்துள்ளார்.

இந்த திரைப்படம் உலகெங்கிலும் இன்று திரையிடப்பட உள்ளது. இந்த திரைப்படத்திற்கு வரிவிலக்கு அளித்து ஆணை பிறப்பித்துள்ள தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

உலகின் சிறந்த விஞ்ஞானிகள் பட்டியல்:

# திண்டுக்கல் பேராசிரியர்கள் 4 பேர் தேர்வு!

நிலக்கோட்டை, ஆக. 25-

சர்வதேச அளவில் கடந்த 2022ல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முதல் 2 சதவீத விஞ்ஞானிகளின் பட்டியலை அமெரிக்காவில் உள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் ஜான் லொன்னிடிஸ் மற்றும் அவரது குழுவினர் வெளியிட்டுள்ளனர். மொத்தம் 22 அறிவியல் துறைகள், 176 துணை துறைகளில் உலகின் சிறந்த விஞ்ஞானிகள் வகைப்படுத்தப்பட்டனர். இந்த விஞ்ஞானிகள், குறைந்தபட்சம் 5 ஆய்வு கட்டுரைகள், புலம் மற்றும் துணை புலம் சார்ந்த சதவீ தங்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டனர். இந்த பட்டியலில் உலகம் முழுவதும் 2 லட்சத்துக்கும் அதிகமான விஞ்ஞானிகள் இடம் பிடித்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து 3,500க்கும் அதிகமான விஞ்ஞானிகள் இடம் பிடித்துள்ளனர். இதில் திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி அருகே காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் கணிதவியல் துறை பாலசுப்பிரமணியம், சேதுராமன், வேதியியல் துறை மீனாட்சி, இயற்பியல் துறை மாரிமுத்து ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

இவர்கள் ஏற்கனவே 2019, 2020, 2021ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட உலகின் சிறந்த விஞ்ஞானிகள் பட்டியலில் இடம் பிடித்து, தற்போது நான்காவது முறையாக இடம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

